செ.வெ. எண்: 430 நாள்: 08.07.11

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி செல்வி இராமஜெயம், அவர்கள் இன்று (08.07.2011) காலை 11.00 மணியளவில் தமிழ்நாடு சமூகநலத் துறையின் கீழ் சென்னை, கொசப்பேட்டையில் செயல்பட்டு வரும் ஆதரவற்ற அரசு இல்ல விடுதியை திடீர் என ஆய்வு செய்தார்கள். மேலும் அங்கு பயிலும் குழந்தைகளிடம் குறைகளை எடுத்துரைக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு தங்கி பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளிடம் அவர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் பிற வசதிகள் முறையாக வழங்கப்படுகிறதா என்பதனை கேட்டு தெரிந்துகொண்டார்கள். அவ்வில்லத்தில் பணிபுரியும் பணியாளர்கள் சில குறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எடுத்துரைத்தனர். அந்த குறைபாடுகளை போக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களிடம் உறுதி அளித்ததோடு, குறைகளை களைய உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும், அவ்வில்லத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப ஆவன செய்தாக உறுத்தி அளித்தார்கள்.

ஆய்வின் பொழுது இவ்வில்ல கண்காணிப்பாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் திருமதி செல்வி இராமஜெயம் அவர்கள் இன்று (7.7.2011) காலை சைதாப்பேட்டை, வெங்கடாபுரம் மற்றும் ஆயிரம் விளக்கு பகுதிகளில் சமூகநலத் துறையின் கீழ் செயல்படும் குழந்தைகள் நல மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களை திடீர் என பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

குழந்தைகள் நல மையங்களை பார்மையிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு குழந்தைகளுக்கு அளிக்கப்படும் சத்து கஞ்சி மற்றும் மதிய உணவு ஆகியவை குறித்து குழந்தைகளிடம் கேட்டறிந்தார்கள். மேலும் அங்குள்ள சமையல் கூடங்களையும் பார்வையிட்டார்கள்.

ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற மாண்புமிகு அம்மாவின் குறிக்கோளை எய்தும் பொருட்டு குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு தரமானதாக மட்டும் இருந்தால் போதாது என்றும் உணவும், உடையும் மட்டும் கொடுத்தால் மட்டும் போதாது அன்பும் அறவனைப்பும் கொடுத்து குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

ஆய்வின் பொழுது குழந்தைகள் நல அமைப்பாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**